[1984 மார்ச் 6

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் மூலம் புகலூரில் அமைக்கப்படும் காகித ஆலை

185-*வினா எண். 20065—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனத்தின் மூலம் புகளூரில் அமைக்கப்படும் காகித ஆலைக்கு இறக்குமதி வரி விலக்கு அளிக்கக் கோரி மாநில அரசு மத்திய அரசுக்கு எழுதியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் மூலம் புகலூரில் அமைக்கப்படும் காகித ஆலைக்கு இறக்குமதி வரி விலக்கு அளிக்குமாறு மைய அரசை கேட்டுக் கொள்ளப் பட்டது. அதற்கு மத்திய நிதி அமைச்சர், ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கு இறக்குமதி வரிவிலக்கு அளிப்பதற்கான அதிகாரம் அரசுக்கு கிடையாது ; இனி இறக்குமதி செய்யவிருக்கும் பொருட்களுக்கு இறக்குமதி வரி விலக்கு அளிப்பது குறித்து நிர்வாக அமைச்சகத்தின் தொழில் நுட்ப அதிகாரிகளுடன் ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது. ஒரு முடிவெடுக்கப்பட்டவுடன் மாநில அரசுக்கு அறிவிக்கப்படுமென அறிவித்திருக்கிறார்கள்.

(முற்பகல் 9-50)

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகலூரிலே அமைக்கப்பட இருக்கிற அந்த காகித ஆலைக்கு வரி விலக்கு அளித்தால் ஏறக்குறைய 12 கோடி ரூபாய் அளவிற்கு மிச்சமாகும் என்று அந்த அதிகாரிகள் எல்லாம் சொல்கிறார்கள். அப்படியானால், அதற்கு நம்முடைய அரசு தீவிரமான நடவடிக்கைகளை எடுத்து. அந்த வரி விலக்கை பெறுவதற்கான முயற்சிகளை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீவிர முயற்சி என்ற அடிப்படையில் அதிகாரிகள் அளவில் மைய அரசோடு இது குறித்து பேசினால் போதாது என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் 4-8-1983 அன்றும் 28-10-1983 அன்றும், மைய அரசுக்கு, மைய நிதி அமைச்சருக்கு, இந்த சலுகைகளை மைய அரசு அளிக்க வேண்டும் என அஞ்சல் எழுதி மைய அரசு அதைப் பரிசீலித்து வருகிறது. விரைவில் மைய அரசு சுமூகமான ஒரு முடிவு எடுக்கும் என இந்த அரசு நம்புகிறது.